**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**MCOP CASE NO.126/2025**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24-ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.K.கிருஷ்ண பிரியா, M.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | -திரு.மாறன் | **PW-1** | தொழில் | - |
| த/க பெயர் | - | | வயது | - |
| கிராமம் | - | | | |
| தாலுக்கா | - | | | |

**(எதிரி ஆஜர் )**

<u>**முதல் விசாரணை:-**</u>

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை ஏற்றக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். சாட்சி தனக்கு கணுக்கால் எலும்பு முறிவு உடைந்து விட்டதனால் நடக்க முடியவில்லை என்று சொன்னார். சாட்சி நீதிமன்றத்தில் வரும் பொழுது ஒருவர் துணையுடன் தான் நடந்து வந்தார் அவரால் நீண்ட நேரம் நிற்க முடியவில்லை என்று கூறினார் அதனால் உட்கார வைத்து சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.24 17:06:52 +0530

| S.No. | Documents | Exhibits No. |
|---|---|---|
| 1. | சேலம் மாவட்டம், மல்லூர் காவல்நிலைய குற்ற எண்.223/2025, முதல் தவகல் அறிக்கை ஆன்லைன் நகல் | ம.த.சா.ஆ.1 |
| 2. | பார்வை மகஜர் ஆன்லைன் நகல் | ம.த.சா.ஆ.2 |
| 3. | மாதிரி வரைபடம் ஆன்லைன் நகல் | ம.த.சா.ஆ.3 |
| 4. | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை TN 90 L 2407 Pulsar 150 இருசக்கர வாகனம் ஆன்லைன் நகல் | ம.த.சா.ஆ.4 |
| 5. | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை TN 90 L 4126 Hero Destini Prime Scooty ஆன்லைன் நகல் | ம.த.சா.ஆ.5 |
| 6. | மணிமா மருத்துவமனை விபத்து பதிவேடு | ம.த.சா.ஆ.6 |
| 7. | மணிமா மருத்துவமனை காயச்சான்றிதழ் ஆன்லைன் நகல் | ம.த.சா.ஆ.7 |
| 8. | குற்ற இறுதி அறிக்கை ஆன்லைன் நகல் | ம.த.சா.ஆ.8 |
| 9. | 21.05.2025 – 30.05.2025 வரையிலான டிஸ்சார்ஜ் சம்மரி | ம.த.சா.ஆ.9 |

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.24 17:06:58 +0530

| | | |
|---|---|---|
| 10. | ஊனச்சான்றிதழ் (30%) | நீ.த.சா.ஆ.1 |

<u>3-ம் மற்றும் 4-ம் எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

விபத்து நடந்த சமயம் காலை 9.00 மணி என்றால் சரி. நான் பெட்ரோல் போட்டுவிட்டு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த போது தான் விபத்து நடந்தது என்றால் ஆமாம், ஓரமாக வந்து கொண்டிருந்தேன் அப்போது விபத்து நடந்தது. விபத்தில் சம்பந்தப்பட்ட மற்றொரு வாகனம் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்தது என்றால் ஆமாம், விபத்து நடந்த சாலை நேரான சாலை என்றால் ஆமாம். மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சாலையை கடந்து சென்ற நான் கவனமாக சென்றிருந்தால் இந்த விபத்தை நடைபெற்றிருக்காது என்றால் சரியல்ல, அவர் ஓவர்டேக் செய்து வந்தார் அதனால் தான் விபத்து ஏற்பட்டது. ஒன்றாம் எதிர்மனுதாரர் அவருடைய பாதையில் சரியான திசையில் தான் வந்து கொண்டிருந்தார் என்றும் நான் தான் ரோட்டை கடக்கும் போது கவனிக்காமல் சென்று விபத்தை வரவழைத்துக் கொண்டேன் என்றால் சரியல்ல. ஒன்றாம் எதிர்மனுதாரருக்கு உரிய ஓட்டுனர் உரிமம் இல்லாத காரணத்தினால் மூன்று மற்றும் நான்கு எதிர்மனுதாரர்கள் நஷ்ட ஈடு தர கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் சரியல்ல. கோரி உள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்பதனால் அது கிடைக்கத்தக்கது அல்ல என்றால்

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.24 17:07:03 +0530

சரியல்ல. எனக்கு நிரந்தர ஊனமோ, வருமான இழப்போ இல்லை என்றால் சரியல்ல. தற்போது எனக்கு 63 வயது என்றால் சரி.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down before me in open court read over to the witness in the presence of accused. Pleaded and admitted by him/her to be correct.

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.24 17:07:09 +0530

Chief Judicial Magistrate,
Erode.